கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
முதலாம் வருடம் முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு
2016/2017 (ஒக்டோபர் 2018)

**ATL 1142 தமிழ்மொழித் திறன் - 1**
**Tamil Language skills - 1**

நேரம்: 02 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் இரு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. (அ) வினைத்திறன் மிக்க தொடர்பாடல் என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

   (ஆ) தொடர்பாடல் படிமுறைகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

   (இ) தொடர்பாடல் செயற்பாட்டில் மொழியின் அவசியம் யாது?

   (ஈ) 'மொழி சாராத் தொடர்பாடல்' (Non verbal Communication) என்பது பற்றிச் சுருக்கமாக விளக்குக.
   (04x05 = 20 புள்ளிகள்)

2. (அ) முறைசார்ந்த தொடர்பாடல் என்பதன்மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

   (ஆ) கீழ்நோக்கிய தொடர்பாடல் முறையை ஒரு சிறந்த தொடர்பாடல் முறை எனக் கருதலாமா? சுருக்கமாக விளக்குக

   (இ) தொடர்பாடல் செயற்பாட்டில் மொழித் தடைகளை இனங்காண்க.

   (ஈ) தொடர்பாடல் திறனை விருத்தி செய்வதற்கான வழிமுறைகள் யாவை?

   (04x05 = 20 புள்ளிகள்)

3. (அ) கூட்டமொன்றை நடத்துவதற்கு செய்யவேண்டிய முன்னாயத்தங்கள் யாவை?

   (ஆ) கூட்டத்தின் நிகழ்ச்சிநிரல் ஒன்று உள்ளடக்கியிருக்கவேண்டிய பிரதான அம்சங்கள் யாவை?

   (இ) நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றுக்கான அழைப்பிதழின் வகைமாதிரி ஒன்றைத் தயாரிக்குக.

   (ஈ) துண்டுப்பிரசுரமொன்று அமைக்கப்பட வேண்டிய முறைமை பற்றிக் கூறுக.

   (04x05 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. நேர்காணல் ஒன்றை மேற்கொள்ள முன்னும் மேற்கொள்ளுமிடத்தும் கவனத்தில் கொள்ளவேண்டிய முதன்மையான அம்சங்கள் பற்றி வரிசைக்கிரமமாக எடுத்துக் காட்டி விளக்குக. (30 புள்ளிகள்)

5. நிர்வாக/ வர்த்தகக் கடிதம் ஒன்று எழுதப்படவேண்டிய முறைகள் மற்றும் அமைப்பொழுங்குகள் பற்றி எடுத்துக்காட்டுவதோடு, உமது பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்த அழிவு, அதற்கான நிவாரணம் என்பன தொடர்பாக பிரதேச செயலாளருக்கு 150 சொற்களுக்குக் குறையாதவகையில் ஒரு கடிதம் எழுதுக. (30 புள்ளிகள்)

6. அறிக்கை ஒன்றை எழுதும்போது பின்பற்றப்படவேண்டிய விதிமுறைகள் பற்றி எடுத்துக் கூறி, குறித்த ஒரு நிகழ்வு அல்லது பிரச்சினை குறித்து சுமார் 250 சொற்களில் அறிக்கை ஒன்றைத் தயாரிக்குக. (30 புள்ளிகள்)